சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண்.ஓ.எஸ்.96/2015

2020ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் லிங்கம் | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>குறுக்கு விசாரணை (3 முதல் 6 மற்றும் 8 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில்)</u>

03.02.2020 - வழக்கின் பிராதை படித்திருக்கிறீர்களா என்றால் எனக்கு படிக்க தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 இலக்க சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாவா சொத்தின் சர்வே நம்பர்.170/10 ஆகும். 30 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1, 2 வாதிகள் என்னுடைய அண்ணன்கள். 1, 2 பிரதிவாதிகள் எனது சகோதரிகள் ஆவார்கள். தாவா சொத்து என்னுடைய தாத்தாவழி பாத்தியப்பட்டது. என் பாட்டியின் பெயர் குமராயி. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் ஒரு இடத்தில் கூட என் பாட்டியின் பெயர் குமராயி என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கருப்பையா மற்றும் குமராயிக்கு ராக்காயி, பேச்சி என்ற 2 வாரிசுகள் ஆவார்கள். என் அம்மாவின் பெயர் ராக்காயி. என் தாத்தாவுக்கு கூடப்பிறந்தவர்கள் தற்போது இல்லை. தாவா சொத்துக்கள் திருவிடைநல்லூர் குரூப்பிற்கு தச்சனேந்தல் கிராமத்தில் உள்ளது. என் தகப்பனார் பெயர் வீரையா. வா.சா.ஆ.1ல் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. நான் தற்காலிகமாக கரூரில் லோடுமேனாக வேலை செய்கிறேன். என்னுடைய நிரந்தர பூர்வீகம் தச்சனேந்தல். தற்போது குடும்பத்துடன் கரூரில் தற்காலிகமாக வசிக்கிறேன். தச்சனேந்தல் கரிசல்குளம் பஞ்சாயத்தில் வருகிறது. பிராதில் வீடு இருந்ததாக நான் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை.

நிரூபணவாக்குமூலத்தில் மட்டுமே கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ2 ரசீது வழங்கும் சமயத்தில் பஞ்சாயத்து தலைவர் பதவி இல்லையென்றும் நாங்களாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்களை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து என் தாத்தாவிற்கு குடும்ப ஏற்பாட்டால் கிடைத்தது என்று சொல்லியுள்ளேன், ஆனால் குடும்ப ஏற்பாடு என்றால் என்னவென்றால் கூட்டாக வாழ்வதால் குடும்ப ஏற்பாடு ஆகும். என் தாத்தா, மணிநாதன் மனைவி முத்துலெட்சுமி, பஞ்சநாதன் ஆகிய மூவரும் பாகம் பிரித்துக்கொண்டார்கள். மணிநாதனுக்கு சர்வே எண்.74/10 என்ற சொத்தை பாகத்தில் கொடுத்தார்கள். என் தாத்தாவிற்கு பல சொத்துக்கள் உள்ளது. என் தாத்தாவின் பாகத்தில் கிடைத்த பூர்வீக சொத்துக்கள் பற்றி பட்டாவை பார்த்து தான் கூறமுடியும். குடும்ப ஏற்பாடு எந்த வருடம் நடந்தது என்றால் நான் படிக்கவில்லை என்பதால் எனக்கு தெரியாது. என் தாத்தா பாகம் பிரிக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் என் அப்பாவுக்கு தான் தெரியும், எனக்கு தெரியாது. என் பாட்டி குமராயி 30 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார். என் பிராதில் என் அம்மா 30 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார் என்று கூறப்பட்டுள்ளது என்றால் என் அம்மா என் சிறுவயதிலே இறந்துவிட்டார். என் அம்மா இறந்து 4 வருடத்தில் என் பெரியம்மா பேச்சியும் இறந்துவிட்டார். அதன் பின்பு எங்களை என் பாட்டிதான் பார்த்துக்கொண்டார். யார் யார் செய்த பாகப்பிரிவினையில் என் அம்மாவிற்கு சொத்து கிடைத்தது என்றால் என் அப்பா அவ்வாறு தான் சொன்னார். பேச்சிக்கு எந்த சொத்தும் கொடுக்கப்படவில்லை. தாவா சொத்தை தவிர என் அம்மாவிற்கு வேறு சொத்துக்களும் உள்ளது. என் தாத்தா இறந்துபோய் விட்டதால் அந்த சொத்துக்கள் எங்களுக்குத்தான் பங்கு. நான் பிராதில் கூறியுள்ள பாகம் என் அம்மா இருக்கும்போதே 30 வருடங்களுக்கு முன் நடந்தது. தாவா சொத்து என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு செட்டில்மெண்ட் ஆவணம் போட்டுள்ளேன். சொத்திற்குண்டான பட்டா, சிட்டா என் தாத்தா பெயருக்கு வாங்கவில்லை. நான் 20 வருடங்களாக கரூரில் குடியிருந்து வருகிறேன். என் அண்ணன் 1ம் வாதி எங்கள் ஊரில் தான் குடியிருக்கிறார். 2ம் வாதி கரூரில் தான் இருக்கிறார். 2ம்

பிரதிவாதி திருப்பரங்குன்றத்திலும் குடியிருக்கிறார். 1ம் பிரதிவாதி திருப்புவனத்திற்கு அருகில் உள்ள ஆலங்குளத்தில் குடியிருக்கிறார். என் அண்ணன் தாவா சொத்து உள்ள ஊரில் குடியிருக்கிறார். என் அம்மா பெயருக்கான வேறு வருவாய்துறை ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை. என் தாத்தா பெயருக்கு தான் ஆவணங்கள் எடுக்கமுடியும், என் அம்மா பெயருக்கு எடுக்கமுடியாது. தாத்தாவின் அப்பா பெயர் மாரிமுத்து ஆகும். நாங்கள் அண்ணன், தம்பிகள் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. என் தங்கைகளுக்கு சொத்தில் பங்கு உள்ளது, நான் இன்னும் கொடுக்கவில்லை. என் பாட்டி எங்களை வளர்க்க மட்டும் தான் செய்தார். நாங்களே திருமணம் செய்துகொண்டோம். 3ம் பிரதிவாதியின் அப்பா பெயர் கருப்பையா தேவர். அவர் அப்பா பெயர் தெரியாது. 3ம் பிரதிவாதியின் தாத்தாவின் பெயர் சந்தனத்தேவர். என் பாட்டியின் பெயர் குமராயி கிடையாது பெருமாயி என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தாவின் முதல் மனைவியான குமராயிக்கு ஆண் வாரிசு இல்லை என்பதால் பெரியநாச்சியை திருமணம் செய்து கொண்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவருக்கும் ஆண்வாரிசு இல்லை என்பதால் 3வதாக என் தாத்தா கருப்பாயியை திருமணம் செய்து கொண்டார் என்றும், அவருக்கு சந்தனம் மற்றும் மாரிமுத்து என்ற 2 ஆண்மக்கள் பிறந்தார்கள் என்றால் சரியல்ல. இந்த 2 ஆண்வாரிசுகளையும் மைனர்களாக காண்பித்து என் தாத்தா 3ம் பிரதிவாதி சந்தனதேவரின் மகன் கருப்பையா தேவருக்கு சர்வே நம்பர்.170/4ல் 55 செண்டை கிரயம் கொடுத்துவிட்டார் என்றும் அதன் தற்போதைய சர்வே நம்பர்.170/4 மற்றும் 170/10பி2 சொன்னால் இல்லை. இவ்வாறு கிரயம் 1974ம் ஆண்டே கிரயம் கொடுத்துவிட்டார் என்றும் அவ்வாறு கிரயம் வாங்கிய கருப்பையா தேவர் 12 செண்டை பள்ளிக்கூடம் கட்ட கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. சந்தனத்தேவர் மகன் கருப்பையா தேவருக்கு கிரயம் கொடுத்துவிட்டதால் தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் எப்போதும் தாவா சொத்தை அனுபவதித்ததே கிடையாது என்றும் எனவே எங்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி 4, 5, மற்றும் 6 பிரதிவாதிக்கு பிளாட் போட்டு விற்றுள்ளதால் காழ்ப்புணர்ச்சி கொண்டு வழக்கை

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தைப்பொறுத்து எங்கள் பெயரில் பத்திரமோ, பட்டாவோ கிடையாது என்று சொன்னால் ஆமாம், என் தாத்தா பெயரில் உள்ளது. எங்களுக்கும் தாவா சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.